1982 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அதற்கான முயற்சிகளைத்தான் அரசாங்கம் மேற்கொண்டிருக்குறது.

(ஆ) பேரளம் ஆதித் திராவிட மாணவர்கள் தங்கும் விடுதி.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் பேரளம் ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதியில் சாக்கடை நீர், குடிநீர் குழாய் அருகே தேங்கிக் கிடப்பதால் மாணவர்களுக்கு மலேரியா நோய் ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதித் திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் 5.2.82 அன்று தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டாட்சியரை தொலைபேசியில் அறிவுறுத்தியபடி வட்டாட்சியர் பேரளம் மாணவர் விடுதிக்கு உடனடியாகச் சென்று பார்வையிட்டு, கீழ்க்காணும் விவரங்களை தொலைபேசியின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநருக்குத் தெரிவித்துள்ளார்.

பேரளம் ஆதிராவிடர்கள் மாணவர் விடுதியானது 30 மாணவர்களைக் கொண்ட விடுதியாகும். இதுசமயம் இந்த விடுதியானது தனியார் கட்டிடத்தில் வாடகைக்கு அமைந்துள்ளது, அந்த விடுதியிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது இந்த விடுதியினை அடுத்துள்ள யள்ம்புநாதர் மடத்தின் மூலம் வெளியில் செல்லவேண்டும். ஆனால் அந்த மடத்திற்குப் பொறுப்பிலுள்ளவர்கள் சில நாட்களுக்கு முன் கழிவு நீரானது வெளியேறும் வழியினை அடைத்துவிட்டதாகத் தெரியவருகிறது. ஆனால் பத்து நட்கட்கு முன்னர் அம்மடத்தின் பொறுப்பிலுள்ளவர்களிடம் தொடர்பு கொண்டதன் விளைவாக கழவுநீர் வெளியேறும் வழியானது திறந்துவிடப்பட்டது.

மேலும், இந்த சாக்கடை கழிவு நீர் தேக்கத்தினால் எந்த ஒரு மாணவனுக்கும் மலேரியா காய்ச்சல் வரவில்லை; 5.2.82 அன்று நன்னிலம் வட்டாட்சியர் பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலருடன் சென்று விடுதியில் உள்ள மாணவர்களின் உடல்நிலையை பரிசோதிக்குமாறு செய்தார். அவ்வாறு பரிசோதித்ததில் மலேரியா காய்ச்சல் எந்த மாணவனுக்கும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். இது குறித்து மாணவரிடையே யாதொரு பதட்டநிலையும் காணவில்லை என்றும் வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

திரு. செ. இராமலிங்கம்: மாதக்கணக்கில் இந்த விடுதியைச் சுற்றி சாக்கடை நீர் தேங்கிக் கிடந்தது. பத்து நாட்களாகத்தான் சாக்கடை நீர் வேறு வழியில் திறந்துவிடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மாதக்கணக்கில் தேங்கிக் கிடந்தது என்றால் காப்பாளர், வெல்பேர் ஆபீஸர்

இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இவர்கள் அரசுக்கு தெரிவித்தார்களா? அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: விவர அறிக்கையில் இது பற்றி விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஸ்வயம்நாதர் மடம் மூலம் கழிவுநீர் வெளியே செல்லவேண்டும். அந்த மடத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் சில நாட்கள் அதை மூடிவிட்டதால் இந்த ஒரு நிகழ்வு ஏற்பட்டது. வரும் காலத்தில் இப்படி நிகழாமல் இருக்க அதிகாரிகளும் மற்றவர்களும் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம்: தற்போது வாடகைக் கட்டடத்தில் விடுதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே ஹரிஜன நலத் துறை வாயிலாக அவர்களுக்கு சொந்தமாக இந்த ஆண்டு அரசு கட்டடம் கட்டித்தருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் முப்பது விடுதிகளுக்கு புதிதாகக் கட்டடம் கட்டப் படுகிறது. அதில் இதையும் சேர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

4. அரசினர் தீர்மானங்கள்.

(அ) நீதிபதி பால்கமிஷன் அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தொடர்ச்சி).

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் மீது விவாதிக்கிற வாய்ப்பினை தந்தமைக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கமிஷன் நியமனத்திற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் போலீஸ அதிகாரிகளும் சுப்பிரமண்ய பிள்ளை உடலை அவரது மகன் சிதம்பரதாணு விருப்பத்தை ஏற்று பரிசீலனை செய்த டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் கொடுத்த அறிக்கை மீது தற்கொலை என அரசாங்கத்திற்கு தகவல் அனுப்பினார். அரசுக்குக் கிடைத்த தகவலை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இதிலே சில சந்தேக உணர்வுகளை எழுப்பியதன் காரணமாக உண்மைகளை உணர்ந்து கொள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பினார்கள். அதனால் ஸி. ஜே. ஆர். பால் கமிஷனை அரசு நியமித்தது. ஆதலால், அரசாங்கத்தினுடைய எண்ணம் தூய்மையானது, நேர்மையானது, நியாயமானது என்பதால் உண்மையைத் தெரிந்து கொள்ள ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்கப்பெறுகின்றன.

திரு. மி. வின்சென்ட்: உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில், எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற ஆர்வத்தை விட, ஆளுங்கட்சிக்கு அதிக அக்கறை இருக்கிறது, அக்கறை செலுத்துகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்